# காலிங்கராயன் தின விழா
# மாலை அணிவித்து மரியாதை

ஈரோடு, ஜன. 20-

காலிங்கராயனின், 734வது தின விழாவை முன்னிட்டு, மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட்டது.

காலிங்கராயன், 734 ஆண்டுக்கு முன், பவானி முதல் கொடுமுடி வரை விவசாயத்துக்கு வாய்க்கால் அமைத்து, தண்ணீர் திறந்த நினைவு நாள், நேற்று மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் அனுச ரிக்கப்பட்டது.

பஞ்சலிங்கபுரம் கிராமத்தில், பொதுமக்கள் சார்பில் காலிங்கரா யன் தினம் கடைபிடிக்கப்பட்டது. காலிங்கராயன் படத்துக்கு, பொது மக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். பெண்கள் முளைப் பாரி எடுத்து, காலிங்கராயன் வாய்க்காலில் விட்டனர்.

காலிங்கராயனின் வாரிசுகளான சித்தார்த், அருண்குமார் ஆகியோர், கிராம மக்களுக்கு நன்றி தெரிவித் தனர். மேலும் அவர்கள் கூறும் போது, நாட்டில் உள்ள நதிகளை தேசியமயமாக்க வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்கருத்தை வலியுறுத்தி தான், காலிங்கராயன் வாய்க்காலை, வெட்டி விவசாயத்தை செழிக்க செய்தார். அனைத்து கிராமங்களி லும், காலிங்கராயன் தினம் கடை பிடிக்கப்பட வேண்டும், என்றனர்.

இதே போல், வெள்ளோடு, பவானி காலிங்கராயன் வாய்க்கால் பகுதிகளிலும், காலிங்கராயன் தினம் கடைபிடிக்கப்பட்டது.